# அருப்புக்கோட்டை நகராட்சி

**பிலவ வருடம் புரட்டாசி மாதம் நாள் : 29.09.2021 புதன் கிழமை மாலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– G.அசோக்குமார் B.Com., PGDCA தனி அலுவலர்**

**பொருள் 1 :** ஆணையாளர், அவர்களின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் – 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்படுகிறது.

**தீர்மான எண்.1339**

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளர், அவர்களின் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் – 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்

**அலுவலககுறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் :**

பதிவு செய்யப்படுகிறது.

**தீர்மான எண்.1340**

**பொருள் 3:** அருப்புக்கேட்டை நகராட்சி பகுதியில் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத்தொட்டி கட்டுதல், பராமரித்தல் மற்றும் இவற்றிலிருந்து பெறப்படும் கசடுகழிவுகளை சேகரித்தல், இடம்பெயர்த்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக கசடுகழிவு மேலாண்மை (FSTP) உபவிதிகள் புதிதாக அமல்படுத்திட உபவிதிகள் அமல்படுத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு ஆலோசனை மற்றும் கருத்துகள் இருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து மூலமாக இந்நகராட்சிக்கு தெரிவிக்க கோரி அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.5939/– ஐ Express Publications (Madurai) Private Limited, Madurai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4514/2018/இ1

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1341**

**பொருள் 4 :** அருப்புக்கேட்டை நகராட்சி பகுதியில் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத்தொட்டி கட்டுதல், பராமரித்தல் மற்றும் இவற்றிலிருந்து பெறப்படும் கசடுகழிவுகளை சேகரித்தல், இடம்பெயர்த்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக கசடுகழிவு மேலாண்மை (FSTP) உபவிதிகள் புதிதாக அமல்படுத்திட நகர்மன்றத் தீர்மானம் எண்.1119 நாள். 07.01.2021–ல் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.21978–39/2020/பா.சா.தி–2 நாள் 24.02.2021–ல் கசடு கழிவு மேலாண்மை வரைவு உபவிதிகள் அமல்படுத்துவதற்கு நிபந்தனைகளுடன் கூடிய பொது அங்கீகாரம் வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் அமல்படுத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு ஆலோசனை மற்றும் கருத்துகள் இருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து மூலமாக இந்நகராட்சிக்கு தெரிவிக்க கோரி தினமணி நாளிதழில் 20.08.2021–ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டது.

இந்நிலையில் இப்பொருள் குறித்து பொதுமக்களிடமிருந்து எந்தவித ஆலோசனையோ மற்றும் கருத்துகளோ ஏதும் வரப்பெறாததால் கசடு கழிவு மேலாண்மை உபவிதிகளை புதிதாக அமல்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. கசடு கழிவு மேலாண்மை உபவிதிகளை புதிதாக அமல்படுத்தி கழிவு உறிஞ்சு நீர் வாகன இயக்குபவர்க்கான கட்டணம் மற்றும் விதி மீறலுக்கான கட்டணம் வசூல் செய்வதற்கான உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் அதற்கான பிரசுர செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4514/2018/இ1

<u>தீர்மானம் :</u>

அனுமதி வழஙகப்படுகிறது.

<u>தீர்மான எண்.1342</u>

பொருள் 5 : அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழஙகல் பிரிவில் கீழ்க்கண்ட 6 தற்காலிக பணியிடஙகளுக்கு 01.10.2012 முதல் 30.09.2013 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.50875/எப்3/2011, நாள்.22.01.2013ன் படி கீழ்க்கண்ட பணியிடஙகளுக்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1315, நாள்.29.07.2013ன்படி 01.10.2013 முதல் 30.09.2014 வரையிலும், இந்நகர்மன்றத் தீர்மான எண்.1675, நாள்.08.08.2014ன் படி 01.10.2014 முதல் 30.09.2015 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 2163 நாள்31.07.2015ன்படி 01.10.2015 முதல் 30.09.2016 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 93 நாள் 07.04.2017ன்படி 01.10.2016 முதல் 30.09.2017 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 195 நாள் 07.08.2017ன் படி 01.10.2017 முதல் 30.09.2018 வரையிலும் இந்நகர்மன்ற தீர்மான எண் 478 நாள் 03.08.2018ன் படி 01.10.2018 முதல் 30.09.2019 வரையிலும் இந்நகர்மன்ற தீர்மான எண் 757 நாள் 29.07.2019ன் படி 01.10.2019 முதல் 30.09.2020 வரையிலும் மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண் 933 நாள் 31.08.2020ன் படி 01.10.2020 முதல் 30.09.2021 வரையிலும் மன்றத்தில் காலநீட்டிப்பு செய்யவும் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. நகராட்சி பொறியாளர் தரம் – II | – | 1 பணியிடம் |
| 2. மின்கண்காணிப்பாளர் தரம் – I | – | 1 பணியிடம் |
| 3. மின்பணியாளர் தரம் – II | – | 1 பணியிடம் |
| 4. பைப்லைன் பிட்டர் தரம் – II | – | 1 பணியிடம் |
| 5. மீட்டர் ரீடர் | – | 1 பணியிடம் |
| 6. ஜீப் ஓட்டுநர் | – | 1 பணியிடம் |

இந்நகராட்சியிலிருந்து இருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ள திருப்புவனம் வைகையாற்றில் இருந்தும், சுமார் 120 கி.மீ. தொலைவில் உள்ள வல்லநாடு தாமிரபரணி கடலோரக் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பம்பிங செய்யப்பட்டு, நகரில் ஏற்கனவே உள்ள 7 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடுதலாக 2 இடஙகளில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பகிர்மானக்குழாய்கள் பதிக்கப்பட்டும் குடிநீர் விநியோகம் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டும், பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை செய்துமுடிக்க மேற்கண்ட பணியிடஙகள் அத்தியாவசியமாக உள்ளதால் அவற்றை 01.10.2021 முதல் 30.09.2022 வரை தொடர்ந்து மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.2626/2011/சி1

<u>தீர்மானம் :</u>

அனுமதி வழஙகப்படுகிறது.

<u>தீர்மான எண்.1343</u>

பொருள் 6 : தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மண்டலத்திலுள்ள 19 நகராட்சிகளும் களப்பணியாளர்களை தனியார் வழி நியமனம் செய்து பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தினை தேர்வு செய்தல் பணிகளுக்கு மாநில அளவிலான நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான மொத்த பட்டியல் தொகை ரூ.99288/—+மொத்த சேவை வரிக்கட்டணம் ரூ.4964.40/— ஆக மொத்தம் 104252/— என நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.2187/2021/ஆ2, நாள் 25.08.2021 தேதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும் விளம்பரம் செய்யப்பட்டமைக்கான மொத்த கேட்புத்தொகையான ரூ.104252/—ல் இந்நகராட்சி பங்கீடு தொகையான ரூ.5487/— கோவில்பட்டி நகராட்சி ஆணையாளருக்கு வங்கி வரைவோலை அல்லது காசோலையாக அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.12357/2017/எச்2

<u>தீர்மானம் :</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

<u>தீர்மான எண்.1344</u>

பொருள் 7 : அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன்படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விபரப்படி உள்ள மூன்றாண்டு காலம் உரிமம் முடிவடையும் கடைகளுக்கு ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு உரிமத்தை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | உரிமம் முடிவடையும் தேதி | ஏற்கனவே உள்ள மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை (15 சதவீதம்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண் 14 | பசீராபானு | 31.03.2021 | 5800 | 870 | 6670 |
| 2 | புதய பேருந்து நிலைய மேற்கு பக்க படிகட்டிற்கு அருகில் உள்ள காலியிடம் | கதீஜாபீவி | 30.11.2021 | 2645 | 397 | 3042 |
| 3 | நத்தலிங்கி தெரு கடை எண் 1 | மகாலட்சுமி | 30.09.2021 | 575 | 86 | 661 |
| 4 | நத்தலிங்கம் தெரு கடை எண் 2 | மகாலட்சுமி | 30.09.2021 | 575 | 86 | 661 |

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.11271/2018/அ1

<u>தீர்மானம் :</u>

அனுமதி வழங்கப்படுகிறது.

<u>தீர்மான எண்.1345</u>

பொருள் 8 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விபரப்படி உள்ள கடைகளுக்கு 2019—2020ம் ஆண்டிற்கான பல்வகை கேட்புப் பதிவேட்டில் கேட்பு எடுத்து எழுதப்பட்டதில் கூடுதலாக கேட்புத் தொகை எழுதப்பட்ட இனஙகளுக்கான தொகையினை தள்ளுபடி செய்து சரியான கேட்புத் தொகையினை வரவு வைத்து எழுத மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடை எண் | பெயர் | கூடுதலாக எழுதப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண் 3 | சாகுல் ஹமீது | 26982 |
| 2 | பழைய பேருந்து நிலைய உள் பக்க கடை எண் 6 | முத்துவேல்பாண்டியன் | 2625 |
| 3 | பழைய பேருந்து நிலைய உள்பக்க கடை எண் 9 | காளிராஜன் | 21824 |

| | | | |
|---|---|---|---|
| 4 | பழைய பேருந்து நிலைய உள்பக்க கடை எண் 10 | எஸ்.எஸ்.ஆறுமுகம் | 3808 |
| 5 | பழைய பேருந்து நிலைய உணவு விடுதி | செந்தில் | 14193 |
| 6 | திருச்சுழி ரோடு கடை எண் 1 | மகமுதாபேகம் | 12250 |
| 7 | ஜவஹர் சஙகத் தெரு கடை எண் 3 | வீரசுந்தரம் | 6750 |
| 8 | பழைய பேருந்து நிலைய இருசக்கர வாகன காப்பகம் | பி.ஆர்.எம்.இன்பசேகரன் | 50500 |
| | மொத்தம் | | 138932 |

மேலும் காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண்கள் 7 மற்றும் 8க்கு எழுப்பப்பட்ட கேட்புத் தொகை வித்தியாசம் ரூ.34/-யும் சேர்த்து மொத்தம் ரூ.1,38,966/- ஐ 2019-2020ம் பல்வகை கேட்பு பதிவேட்டின் இறுதியிருப்புத் தொகையிலிருந்து தள்ளுபடி செய்து 2020-2021ம் ஆண்டிற்கு ஆரம்ப இருப்பாக எடுத்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.11271/2018/அ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

**<u>தீர்மான எண்.1346</u>**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் வார்டு எண்.12ல் திருச்சுழி ரோடு, கதவு எண்.168ல் குடிநீர்வரிவிதிப்பு எண்.126/5386ஆனது 2007-2008ம் ஆண்டு நிரந்தர துண்டிப்பு செய்யப்பட்ட பின் தற்போது நடப்பு 2021-2022ம் ஆண்டு வரை கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது என திரு.P.மணிகண்டன் என்பவர் 24.09.2021ல் விண்ணப்பம் செய்துள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் பொறியியல் பிரிவில் உள்ள நிரந்தர துண்டிப்பு பதிவேட்டை சரிபார்த்ததில் மேற்கண்ட குடிநீர் இணைப்பானது 2007-2008ம் ஆண்டு நிரந்தர துண்டிப்பு செய்யப்பட்டு வைப்பு தொகையும் ஈடுசெய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் இணைப்பு எண்.126/5386க்கு 2007-2008ம் ஆண்டிற்கு பிறகு கேட்பு ஏதும் எழுப்பப்படவில்லை. 2017-2018ம் ஆண்டு ஆன்லைன் சப்வோர்ராக மாற்றம் செய்யும் போது மேற்கண்ட இணைப்பிற்கு தவறாக கணினியில் கேட்பு ஜெனரேட் ஆகியுள்ளது. இதன் அடிப்படையில் நிரந்தர துண்டிப்பு பதிவேட்டில் உள்ள அனைத்து குடிநீர் இணைப்புகளையும் சரிபார்த்த போது கீழ்கண்ட குடிநீர் இணைப்புகள் 2007-2008 மற்றும் 2008-2009ம் ஆண்டில் நிரந்தர துண்டிப்பு செய்யப்பட்டு வைப்பு தொகை ஈடுசெய்யப்பட்ட குடிநீர் இணைப்புகள் சிலவற்றிக்கு 2017-2018ம் ஆண்டு ஆன்லைன் சப்ட்வோர் மாற்றத்தின் போது தவறாக கணினியில் கேட்பு ஜெனரேட் ஆகியுள்ளது அதன் விபரம் பின் வருமாறு.

| வரிசை எண் | வார்டு எண் | குடிநீர் வரிவிதிப்பு எண் | பெயர் (ம) முகவரி | தற்போது வரை நிலுவையில் உள்ள தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 27 | 126/3840 | எம்.மலையரசன், கதவுஎண்.64, சௌந்தரராஜபுரம் தெரு. | ரூ.4976 |
| 2. | 12 | 126/1806 | ஜெ.தஙகபாண்டி, கதவு எண்.5, வர்த்தக சஙகம் தெரு | ரூ.4690 |
| 3. | 12 | 126/5386 | பி.மணிகண்டன், கதவுஎண்.168, திருச்சுழி ரோடு | ரூ.16570 |
| 4. | 36 | 126/4115 | எ.முத்துவாழவந்தான், கதவுஎண்.9, உரடிப்போ தெரு | ரூ.4690 |
| 5. | 11 | 126/4885 | ராமசுப்பு ஆண்டாள், கதவுஎண்.251, திருச்சுழி ரோடு | ரூ.16570 |
| 6. | 30 | 126/8510 | த.ராஜசேகர், கதவுஎண்.66G, திருச்சுழி ரோடு | ரூ.5015 |
| | | | மொத்தம் | ரூ.52511 |

எனவே ஆன்லைன் (Software) சாப்ட்வேர் மாற்றத்தின் போது தவறாக கணினியில் கேட்பு ஜெனரேட் ஆகியுள்ள மேற்கண்ட குடிநீர் இணைப்புகள் மற்றும் அதற்கான கேட்பு தொகையையும் கணினியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.10664/21/இ2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

**<u>தீர்மான எண்.1347</u>**

**பொருள் 10 :** அருப்புக்கேட்டை நகராட்சி புதுக்கடை பஜார் அருகில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ இராமலிங்கா சௌடாம்பிகை அம்மன் திருக்கோவிலைச்சுற்றி உள்ள பாதையில் மழைக் காலஙகளில் மழைநீர் தேஙகி சுகாதாரக்கேடாக உள்ளது என அப்பகுதி மக்கள் கொடுத்த கோரிக்கையின்படியும் மேற்படி கோவிலைச்சுற்றியுள்ள பகுதியில் பேவர் பிளாக் தளம் பதிக்க ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தலின் படியும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7,25,000/—ஐ நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்டுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.9984/2021/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

**<u>தீர்மான எண்.1348</u>**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகர் பகுதிகளில் டெஙகு கொசு புழு ஒழிப்பு பணிக்காக ஏற்கனவே 103 கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்சமயம் கொரோனா இரண்டாம் அலை மற்றும் மூன்றாம் அலை எதிர்நோக்கி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும், தடுப்பூசி முகாம் நடத்த ஏதுவாக கணக்கெடுப்பு பணி மேற்கொள்வதற்கும் கூடுதலாக 43 கொசு புழு ஒழிப்பு பணியாளர்கள் நியமனம் செய்து பணிபுரிந்து வருகின்றனர். இதில் நியமனம் செய்து பணிபுரிந்து வரும் பணியாளர்கள் அனைவருக்கும் மாதத்தில் 15 நாட்கள் மட்டுமே பணி (தேவைகேற்ப ஒரு சில நாட்கள் கூடுதல் பணி) வழஙகப்படுகிறது இதில் அனைவருக்கும் ஏற்கனவே நகர்மன்றத்தில் பெறப்பட்ட உத்தேசசெலவு தொகைக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும் டெஙகு கொசு ஒழிப்பு டிபிசி, மஸ்தூர் பணியாளர்கள் 146 நபர்களுக்கு நவம்பர் 2021 முதல் ஏப்ரல் 2022 மாதம் வரை விருதுநகர் அவர்களின் (ந.க.எண் அ7/10614/2020, நாள் 28.08.2020) 2020—2021 ம் ஆண்டு திருத்தப்பட்ட செயல்முறைகளில் தெரிவித்துள்ளபடி தினசரி ஊதிய விலை விகிதத்தில் பணியாளர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.416/— வீதம் தினக்கூலி அடிப்படையில் 180 நாட்களுக்கு பணியமர்த்த ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.7737600/—க்கு அதிகமாகாமல் ஊதியம் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க.எண் 8009/2013/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

**<u>தீர்மான எண்.1349</u>**

**பொருள் 12 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவுகள் 1 முதல் 6 வரை உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் பொதுசுகாதார தளவாட சாமான்கள் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பொதுசுகாதார அவசியம் கருதி 2021—22ம் ஆண்டிற்கு கீழ்கண்ட தளவாட சாமான்கள் வாஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | விபரம் | எண்ணம் | வ.எண். | விபரம் | எண்ணம் |
|---|---|---|---|---|---|
| 1 | கைமார் | 450 எண்ணம் | 8 | சீசர் | 15 எண்ணம் |
| 2 | மூஙகில்மார் | 150 எண்ணம் | 9 | அரிவாள் | 15 எண்ணம் |
| 3 | கடப்பாரை | 15 எண்ணம் | 10 | பெரியவாளி | 15 எண்ணம் |
| 4 | மண்வெட்டி | 75 எண்ணம் | 11 | சிறியவாளி | 15 எண்ணம் |
| 5 | பெரிய தட்டு | 50 எண்ணம் | 12 | குப்பை அள்ளும்தகடு | 50 எண்ணம் |
| 6 | சிறிய தட்டு | 50 எண்ணம் | 13 | மாப்பு | 25 எண்ணம் |
| 7 | வாறுகால் கரண்டி | 100 எண்ணம் | 14 | சிறிய துரண்டு | 60 எண்ணம் |

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.10452/2021/எச்1

**தீர்மானம் :**

அனுமதி வழஙகப்படுகிறது.

**தீர்மான எண்.1350**

பொருள் 13 : அருப்புக்கோட்டை நகராட்சியின் உட்புறத்தில் தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருவதால் கட்டிட பணியினை மேற்கொள்ளும் பணியாளர்கள் கட்டிட பணி முடிவடையும் காலம் வரை தஙகுவதற்கு அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பினை வழஙகும்படி CCCL Limited நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.மேற்படி ஆணையாளர் குடியிருப்பு தற்சமயம் காலியாக உள்ளபடியால் மேற்படி பணியின் அவசியம் கருதியும்,நகராட்சிக்கு ஏற்படும் வருவாயை கருத்தில் கொண்டும் CCCL Limited நிறுவனத்திற்கு மாத வாடகை அடிப்படையில் கட்டிட பணி முடிவடையும் காலம் வரை பயன்படுத்திக் கொள்ளவும் , மாத வாடகையாக ரூ7,100/– ஐ நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழஙகலாம்.

2.மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் , நகராட்சிக்கு ஏற்படும் வருவாயை கருத்தில் கொண்டும் கட்டிட பணி முடிவடையும் காலம் வரை ஆணையாளர் குடியிருப்பினை மாத வாடகை அடிப்டையில் பயன்படுத்திக் கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க எண் 10634/2021/அ1

**தீர்மானம் :**

அனுமதி வழஙகப்படுகிறது.

**தீர்மான எண்.1351**

பொருள் 14 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட தெற்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.1144, நாள் 29.01.2021 ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 20.07.2021 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.காசிவிஸ்வநாதன் அருப்புக்கோட்டை | 1.48% மதிப்பீட்டு விலையை விட அதிகமாக |
| 2. | திரு.K.கமாட்க்ஷிராஜன் அருப்புக்கோட்டை | 0.002% மதிப்பீட்டு விலையை விட குறைவாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.002% குறைவாக கொடுத்துள்ள திரு.K.கமாட்க்ஷிராஜன், அருப்புக்கோட்டை ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.462/2021/இ1

**தீர்மானம் :**

அனுமதி வழஙகப்படுகிறது.

**தீர்மான எண்.1352**

**பொருள் 15 :** இந்நகராட்சி அலுவலக கணினி பிரிவிற்கு தேவையான உதிரி பாகங்கள் விலைப்புள்ளி அனுப்பக்கோரி கடிதம் அனுப்பியதில் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட விபரப்படியான விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | தேவையான பொருட்கள் | தேவையான எண்ணிக்கை | விக்டரி சிஸ்டம் சிவகாசி | ஸ்ரீமதி கம்யூட்டர்ஸ் சிவகாசி | ஜேனியூன் கம்யூட்டர்ஸ், சிவகாசி |
|---|---|---|---|---|---|
| 1 | Cannon Xerox NPG 59-Toner | 1 | 2960 | 3790 | 3960 |
| 2 | Cannon Copier Drum Unit | 1 | 17600 | 20600 | 18600 |
| 3 | HP 55A Toner | 1 | 11880 | 13880 | 12880 |
| 4 | Cannon image class toner | 1 | 4750 | 5500 | 5750 |
| 5 | RICIHA 1230 D Toner | 1 | 4800 | 5900 | 5800 |
| 6 | Logitech optical mouse | 1 | 350 | 600 | 550 |
| 7 | Keyboard | 1 | 750 | 1050 | 950 |
| 8 | Antivirus | 1 | 500 | 700 | 700 |
| 9 | Epson 80 column printer ribbon cartage | 1 | 220 | 480 | 320 |
| 10 | External CD write | 1 | 3000 | 4500 | 4000 |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள விக்டரி சிஸ்டம், சிவகாசி அவர்களின் விலைப்புள்ளி ஒப்புக்கொள்ளலாம்.
2. மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழுங்கியையதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.7908/2021/பி4

**தீர்மானம் :**

அனுமதி வழங்கப்படுகிறது.

**தீர்மான எண்.1353**